## இலை – தழைகள் … தொழுவுரம்… பச்சிலைக்கரைசல்…

## 25.01.2014

எந்தப் பொருளும் வெளியிலிருந்து பண்ணைக்குள் வரக்கூடாது. விளைபொருள் மட்டும்தான் வெளியில் செல்ல வேண்டும். இது தான் தற்சார்பு விவசாய முறை' என்று இயற்கை விவசாய வல்லுநர்கள் சொல்லி வருகிறார்கள். இதுதான் பாரம்பரிய விவசாய முறையும் கூட. ஜீவாமிர்தம், பஞ்சகவ்யா… என்று இயற்கை வழியிலேயே இடுபொருட்களைத் தயாரித்து விவசாயம் செய்யும் முறை தற்போது பரவிக் கொண்டிருக்கிறது. என்றாலும் பாரம்பரிய முறைப்படி இலை – தழைகள், தொழுவுரம் ஆகியவற்றை மட்டும் வைத்தே நல்ல மகசூல் எடுக்கும் விவசாயிகளும் இங்கே இருக்கிறார்கள். சென்னை, கூடுவாஞ்சேரி அருகேயுள்ள, காயரம்பேடு பகுதியைச்சேர்ந்த முன்னோடி விவசாயி கோதண்டராமன், அவர்களில் ஒருவர்!

கூடுவாஞ்சேரி – திருப்போரூர் சாலையில், 5 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது, காயரம்பேடு கூட்டு ரோடு. இங்கிருந்து வலதுபுறம் ஒரு கிலோமீட்டர் சென்றால், கோயிலும்… அதை ஒட்டியுள்ள குளமும் நம்மை வரவேற்கின்றன. பச்சைப்பசேலென நெல் வயல்கள் கண்களைப் பறிக்கின்றன. வரப்பு வழியே நடந்து, கோதண்டராமனின் நிலத்தை அடைந்தோம். உற்சாக வரவேற்பு தந்தவர், “ நான் ஏழாவது வரை படிச்சிருக்கேன். அங்க, இங்கனு நிறைய இடத்துல வேலை பார்த்தேன். ஆனா எதுவுமே சரிப்பட்டு வரல. பிறகு, நாட்டு மாடுகளை மட்டுமே வெச்சு கிழக்கு தாம்பரத்துல பால் பண்ணை போட்டேன். மவுண்ட் ரோடு, ஆயிரம் விளக்குப் பகுதிகளுக்கு பாலைக் கொண்டு போய் வித்தேன். ஆரம்பத்துல நல்லா போச்சு. போகப்போக அதுவும் கையைக்கடிச்சுடுச்சு. அந்த சமயத்துலதான், 'நீ சம்பாதிச்சது போதும்… இனி, விவசாயத்த பாத்துக்கோனு அப்பா சொன்னார் அதுக்கப்பறம்தான் விவசாயத்துல முழுமூச்சா இறங்கினேன். அதுல சம்பாதிச்சுதான் புள்ளைகளைப் படிக்க வெச்சு, கல்யாணமும் பண்ணி வெச்சுருக்கேன். கல்பாக்கம் சமூக வானொலி நிலையத்துல விவசாயத்தைப் பத்தி பேசிட்டு வர்றேன். இந்த அங்கீகாரத்தையும், புகழையும் எனக்குக் கொடுத்தது விவசாயம் தான்” என்று உழவுக்கு நன்றி சொன்ன கோதண்டராமன் , தொடர்ந்தார்.

“ சுத்தியும் ரியல் எஸ்டேட்காரங்க வளைச்சுப் போட்டுட்டாங்க. இந்தப்பகுதியில ஒரு ஏக்கர், ஒரு கோடி ஒன்றரைக் கோடிக்கு மேல விலை போகுது. இத்தனை வருஷமா நமக்கு சோறு போட்டுட்டு வர்ற நிலத்தை வித்துட்டு, அதுல கிடைக்கற காசை வெச்சுக்கிட்டு, வீட்டுல உட்கார்ந்து கிடக்க எனக்கு மனசில்ல. அதனாலதான் இன்னமும் விவசாயம் பண்றேன். என் மனநிலையிலேயே இன்னமும் இங்க நிறைய பேரு இருக்காங்க.

எனக்கு ரெண்டே கால் ஏக்கர் நிலம் இருக்கு. 'மணல் சாந்து' மாதிரியான மண் வகையைச் சேர்ந்தது. இந்த மண்ணுல 5 அங்குலம் வரைக்கும் தான் நாம கொடுக்கிற எருவோ சத்துகளோ ஊடுருவும். அதுக்குக் கீழ இறங்காது. அதனால நெல் மாதிரி, குட்டையான வேர் இருக்குற பயிர்கள் நல்லா வரும். நான் எப்பவும் ஆடிப்பட்டத்துக்கு (சம்பா) நெல் போட்டுடுவேன். இந்த தடவை ஒன்றரை ஏக்கர்ல பொன்னி நெல், 20 சென்ட்ல மாட்டுக்கு சோளம் இது ரெண்டையும் போட்டிருக்கேன். மீதி நிலத்தையும் நெல் போடுறதுக்கு தயார் பண்ணிட்டிருக்கேன். நெல்லை அறுத்ததுக்கப்பறம் … உளுந்து, வேர்க்கடலைனு ஒரு போகம் போட்டு எடுத்துடுவேன்.

தங்கச்சம்பா, சீரகச்சம்பா, தூய மல்லி, வைகுண்டா, கல்லுருண்டை, நுருங்கன், குதிரைவாலி, மோசனம், கப்பக்கார், குள்ளகார்(சிவப்பரிசி), பிசினி, பச்சவாரி(கருப்பு), காடைக் கழுத்தான்னு ஏகப்பட்ட பாரம்பரிய நெல் ரகங்களைப் பயிர் செஞ்சு, மதுராந்தகத்துல இருக்கிற இந்தியப்பாரம்பரிய அறிவியல் நிலையத்துக்கு ஆராய்ச்சிக்காகக் கொடுத்திருக்கேன். 'பயிர் பண்ணவே முடியாது'னு கைவிட்ட ஜே.ஜே-92 ரகத்தைக்கூட விளைவிச்சுக் காட்டியிருக்கேன். எதுக்குமே ரசாயன உரம் போட்டதேயில்லை. இலை – தழைகள் … தொழுவுரம்… பச்சிலைக்கரைசல்… மட்டும் தான் கொடுப்பேன். நிலத்துக்கு வெளியில போய் இடுபொருள் வாங்கறது கிடையாது. பஞ்சகவ்யா அமுதக்கரைசல்னு எதையும் தயாரிச்சுக் கொடுக்க மாட்டேன். எங்கிட்ட இருக்குற நாட்டு மாடு மூலமாகிடைக்கிற சாணத்தைக் குழிக்குள்ள போட்டு இலை – தழை பண்ணைக்கழிவு எல்லாத்தையும் போட்டு, நல்லா மட்க வெச்சு அதைத்தான் தொழுவுரமா பயன்படுத்துறேன். எப்பவும் கோடை உழவு ஓட்டி வெச்சுடுவேன். ஆடி, சித்திரைப் பட்டத்துல நெல் போடுவேன். இந்த முறை மழை சரியா இல்லாததால , ஐப்பசிப் பட்டத்துல போட்டிருக்கேன்" என்ற கோதண்டராமன், ஒரு ஏக்கர் நிலத்தில் பொன்னி நெல் சாகுபடி முறையைச் சொன்னார். அதை அப்படியே தொகுத்திருக்கிறோம்.

விதை நேர்த்தி அவசியம்!

' தரமான விதையை விதைத்தால் தான், நல்ல விளைச்சல் எடுக்க முடியும். அதற்கு விதை நேர்த்தி அவசியம். ஒவ்வொரு அறுவடையின் போதும், அடுத்த விதைப்புக்குத் தேவையான அளவு விதை நெல்லை எடுத்து … இளம்வெயிலில் காய வைத்து எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும். ஒரு நெல்லை உடைத்துப் பார்த்தால், அரிசியின் ஓரங்களில் மாவு ஒதுங்கி சிறு கம்பி போல் நீண்டிருக்கும். இதுதான் காய்ந்ததற்கான அடையாளம். இப்படி காய்ந்த நெல்லை, வேப்ப எண்ணெய் அல்லது வேப்பம்பிண்ணாக்குக் கரைசலில் நனைத்து உலர்த்திய, சணல் சாக்கில் இட்டு, அதனுடன் காய்ந்த வேம்பு, நொச்சி இலைகளையும் இட்டு வைத்துச் சேமிக்கலாம்.

**அமாவாசையில் விதைப்பு**

ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை நெல் தேவைப்படும். நாற்றங்காலில் விதைப்பதற்கு முன்பாக… 10 லிட்டர் தண்ணீரில் பூரிதக் கரைசலாக உப்பைக் கரைத்து, தேவையான அளவு விதை நெல்லைக் கொட்ட வேண்டும். கரைசலில் மேலே மிதப்பவற்றை அகற்றிவிட்டு, அடியில் தங்கிய தரமான விதை நெல்லை மட்டும் எடுத்து சாக்கில் கட்டி , தண்ணீரில் ஊற வைத்தால்… மறுநாள் நெல்முனை லேசாக வெடித்தது போல் இருக்கும். இதை எடுத்து, அரை லிட்டர் வடித்த கஞ்சியில் இட்டு, அதனுடன் அரை கிலோ அசோஸ்பைரில்லம் சேர்த்து பிசைந்து வைத்துக் கொள்ள வேண்டும். வழக்கமான முறையில் நாற்றங்கால் அமைத்து தொழுவுரம் இட்டு, அதில் அமாவாசை தினத்தன்று மாலை வேளையில விதை நெல்லை பரவலாகத் தெளித்து விட வேண்டும். உடனே தண்ணீர் விட்டால், விதை சேற்றுக்குள் புதைந்து விடும். அதனால் முளைப்பெடுத்த பிறகுதான் தண்ணீர் விட வேண்டும். 15 நாட்களில் நாற்று தயாராகி விடும். அதிகபட்சம் 20 நாட்களுக்குள் பறித்து, நடவு செய்து விட வேண்டும்.

**நிலம் தெரிய நீர் கட்டு…**

**களம் நிறைய நெல் கட்டும்!**

நாற்று தயாராகும் போதே நடவு நிலத்தையும் தயார் செய்ய வேண்டும். தேர்வு செய்த ஒரு ஏக்கர் நிலத்தில் தக்கைப்பூண்டு, அவுரி ஆகியவற்றின் விதைகளைக் கலந்து ஐந்து கிலோ அளவுக்குத் தூவி விட்டு … பூ

எடுக்கும் வரை வளர்ந்த பிறகு, மடக்கி உழுது, 10 நாட்கள் வரை அப்படியே விட வேண்டும். பிறகு நிலத்தை உழுது சமன் செய்து சேறாக்கி… குத்துக்கு 4 நாற்றுகள் வீதம் நடவு செய்து, 4 அங்குல உயரத்துக்கு தண்ணீர் கட்ட வேண்டும். 'நிலம் தெரிய நீர் கட்டு…களம் நிறைய நெல் கட்டும்' என்று பழமொழி சொல்வார்கள். அதற்கேற்ப தொடர்ந்து… நிலம் காய்ந்தவுடன் 4 அங்குல உயரத்துக்கு தண்ணீர் கட்டி வர வேண்டும். நடவு செய்த 15 நாட்களுக்குப் பிறகு களைகளை அகற்றி… 100 கிலோ தொழுவுரத்தைத் தூவ வேண்டும். நுண்ணுயிர் சத்துகள் குறைவான மண்ணாக இருந்தால், தொழுவுரத்தோடு தலா ஒரு கிலோ அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, சூடோமோனஸ் ஆகியவற்றையும் கலந்து கொள்ளலாம். தொடர்ந்து 15 நாட்களுக்கு ஒரு முறை பச்சிலைக் கரைசலைத் தெளித்து வர வேண்டும். நெல் மணிகளில் பால் ஏறும் சமயத்தில் செழிம்பாக தண்ணீர் கொடுக்க வேண்டும்.கதிரில் நெல்மணிகள் முற்றி, பச்சை நிறத்திலிருந்து பழுப்பு நிறத்துக்கு மாறும் போது நிலத்தைக்காய விட்டு அறுவடை செய்ய வேண்டும். பொன்னி நெல் நடவு செய்த 130 நாட்களில் அறுவடைக்கு வரும்(மொத்த வயது 150 நாட்கள். நாற்றங்காலில் 20 நாட்கள் வயலில் 130 நாட்கள்). ஏக்கருக்கு 20 மூட்டைகளுக்கு (80 கிலோ மூட்டை) மேல் மகசூல் கிடைக்கும்.'

**ஏக்கருக்கு 25 மூட்டை!**

சாகுபடிப்பாடம் முடித்த கோதண்டராமன், " என் வயலோட மண் தன்மைக்கு எந்த ரக நெல் போட்டாலும், ஏக்கருக்கு 25 மூட்டைக்குக் குறையாம மகசூல் கிடைச்சுடும். இந்த முறை பொன்னியிலயும் இதே அளவு கிடைக்கும்னு நினைக்கிறேன். வீட்டுக்குத் தேவையான அளவு எடுத்துவெச்சுக்கிட்டு மீதியை வித்திடுவேன். இப்போ ஒரு மூட்டை, 2 ஆயிரம் ரூபாய் வரை விலை போகுது. 20 மூட்டைனே வெச்சுக்கிட்டாலும்… 40 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். வைக்கோல் 6 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையாகும். மொத்தமா 46 ஆயிரம் ரூபாய் கிடைக்கும். 14 ஆயிரம் ரூபாய் செலவு போக, 32 ஆயிரம் ரூபாய் லாபம்" என்று மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தார்.

**இங்கே விதைகள் கிடைக்கும்!**

மதுராந்தகம் அருகேயுள்ள இந்திய பாரம்பரிய அறிவியல் நிலையத்தில் பாரம்பரிய விதை நெல் வகைகள் குறைந்த விலையில் விற்கப்படுகின்றன. அது பற்றிப் பேசிய நிலையத்தின் திட்ட இயக்குநர் சுப்ரமணியம், " சீரகச்சம்பா, கிச்சிலிச்சம்பா, தூயமல்லி, சிகப்புக் குருவிகார், குடைவாலை என கிட்டத்தட்ட 100 ரக விதைகள் எங்களிடம் உள்ளன. இவற்றில் ஏழு ரக விதைகள் அதிகளவில் உள்ளன. தவிர, காய்கறிகள், சிறுதானிய விதைகளும் உள்ளன. ஒற்றை நாற்று நடவு, சான்று விதை உற்பத்தி, மண்வளம், இயற்கை இடுபொருட்கள் தயாரிப்பு, பாரம்பரிய விதை சேமிப்பு முறை, வீட்டுத் தோட்டம், ஆயுர்வேத மருத்துவப் பயிற்சி, தாவரங்களுக்கான விருக்ஷாயுர்வேதம்… என பல பயிற்சிகளைக் கொடுத்து வருவதோடு, இயற்கை இடுபொருட்களை விற்பனை செய்த வருகிறோம். தேவையுள்ள விவசாயிகள் எங்களை அணுகலாம்" என்றார்.

**தொடர்புக்கு, தொலைபேசி: 044 - 24475862 , செல்போன் : 99427–96324.**

**பச்சிலைக்கரைசல்!**

10 லிட்டர் கொள்ளளவு கொண்ட மூன்று பானைகளை எடுத்துக் கொண்டு, ஒவ்வொன்றிலும் 5 லிட்டர்

தண்ணீரை ஊற்றிக்கொள்ள வேண்டும். தலா ஒரு கிலோ எருக்கன், மஞ்சள் அரளி ஆகிய இலைகளை இடித்து முதல் பானையில் இட வேண்டும். அரை கிலோ வேப்பங்கொட்டை அல்லது வேப்பம்பிண்ணாக்கை இடித்து, மூன்றாவது பானையில் இட வேண்டும். மூன்று பானைகளின் வாய்ப்பகுதியையும் துணியால் கட்டி, நிலத்தில் குழி தோண்டி, வாய்ப்பகுதி வெளியில் இருக்குமாறு புதைத்து வைத்து... தினமும் கரைசலைக் கலக்கி வர வேண்டும். 15 நாட்களுக்குப் பிறகு, மூன்றையும் ஒன்றாகக் கலந்தால்... பச்சிலைக்கரைசல் தயார். ஒரு லிட்டர் கரைசலை, 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்க வேண்டும். மேற்சொன்ன அளவு, ஒரு ஏக்கருக்குப் போதுமானதாக இருக்கும்.

**தொடர்புக்கு, கோதண்டராமன், செல்போன் : 98405 – 40260.**

**ஆதாரம் : பசுமை விகடன்**
**வெளியீடு : 25.01.14**
www.vikatan.com